செ.வெ.எண். 380

# செய்தி வெளியீடு – 8.5.2010

## மத்திய அரசின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதிவாரி முறையினை பின்பற்றலாம்! நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களது கருத்துரை!

முஸ்லிம்களுக்குத் தனி இடஒதுக்கீடு கொடுப்பது பற்றியும், அருந்ததியர்க்கு உள் இடஒதுக்கீடு வழங்குவது பற்றியும், ஆய்வு செய்து தமிழக அரசுக்குப் பரிந்துரைகள் வழங்கிய தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் தற்போது மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், ஜாதிவாரி முறை பின்பற்றப்பட வேண்டும் என்று 20.4.2010 அன்று கருத்துரையினை வழங்கியுள்ளார். இன்றைய சூழ்நிலையில் பொதுமக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் பயன்படும் என்பதால் 20.4.2010 அன்று நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் தமிழக அரசுக்கு வழங்கிய கருத்துரை தமிழக அரசின் சார்பில் இத்துடன் இணைத்து வெளியிடப்படுகிறது.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

//